மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 563, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்·

563—

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி வசதி.

*1618—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அனைத்து நகராட்சிப் பேருந்து நிலையங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நகராட்சிப் பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி பெட்டிகள் வைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனை யில் இல்லை.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மதுரை மற்றும் திருச்சி போன்ற நகரங்களில் உள்ள புகைவண்டி நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டு, அங்கே பயணி கள் காத்திருக்கும் நேரத்தில் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல், அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் உள்ள பேருந்து நிலையங்களிலும் ஏராளமான பயணிகள் பேருந்துகளுக்காகக் காத்துக் கொண் டிருக்கும் நேரங்களில், இத்தகைய தொலைக்காட்சிப் பெட்டி கள் அங்கே வைக்கப்பட்டிருந்தால் அவை பயனுள்ளவையாக இருக்கும். இப்போது கிராமங்கள் தோறும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைக்க கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலம் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைவு படுத்துகின்ற இந்தச் சமயத்தில் மக்கள் அதிகமாகக் கூடுகின்ற நகராட்சிப் பேருந்து நிலையங்களில் அத்தகைய தொலைக்காட்சிப் பெட்டிகளை முன்னுரிமையளித்து வைப் பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பு நிலை, தேர்வு நிலை, மற்றும் முதுநிலைத் தரத்தில் உள்ள நகராட்சிகளில் ஏராள மான மக்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையில் அதிகமான பேருந்துப் போக்குவரத்து அமைந்துள்ள நகராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குள்ள பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய நகராட்சிப் பகுதிகளில் பேருந்து நிலையங்கள் மட்டுமல்லாமல் பார்க் போன்ற இடங்களிலும் இது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இது பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட தலைநகரங்களில் உள்ள பெரிய பேருந்து நிலையங்களில் கூட தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கிறபோது, பேருந்துகள் எந்தெந்த மணிக்கு வரும், எப்போது செல்லும் என்பதை பயணிகள் தெரிந்து கொள்ளவும், செய்திகள் அறிந்து கொள்ளும் வகையிலும், இந்த நிதி ஆண்டிலாவது அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் உள்ள பேருந்து நிலையங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி வைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த நகராட்சிகளில் இருக்கின்ற நிதிநிலைமைகளைப் பொறுத்து அரசு இது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 564, திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.